மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மேற்படி யூனியனில் 1976–77-ம் ஆண்டில் மொத்த நட்டம் ரூபாய் 7,70,332.52–ம் நிகர நட்டம் ரூபாய் 44,591·46-ம் ஏற்பட்டது. மேற்படி யூனியனில் 1977–78-ம் ஆண்டுக்கு தணிக்கை நடை பெற்று வருகிறது.

(ஆ) (1) ரூபாய் 6,00,000 செலவில் அமைக்கப்பட்டுள்ள குளிர் பதன சாதனங்கள் 1971-ம் ஆண்டு மே திங்கள் 30-ம் நாள் முதல் பல காரணங்களால் இயங்காமையினால் அதற்காக வாங்கப்பட்ட கடனுக்கு வருடா வருடம் வட்டி செலுத்த வேண்டியுள்ளது.

(2) முன்னாள் அரசு பால் நிறுவனத்திற்குப் பால் சேகரித்து அனுப்பியதில் ஏற்பட்ட குறைவு, பால் கெட்டுப் போதல், தரமான பால் அனுப்பாமை.

(இ) (1) 1977–78-ல் மேற்படி யூனியனுக்கு பால் கொள் முதல் அதிகரிக்க அதனுடன் இணைக்கப்பட்டுள்ள 4 அரிசன சங்கங்களின் 204 அங்கத்தினர்களுக்கு நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள் மூலம் ரூ. 3,06,000 கடனும், அரிசன நல மான்யத் திட்டத்தின் கீழ் ரூ. 1,02,000 நிதியுதவியும், மற்றும் 6 சங்கங்களின் 111 அங்கத்தினர்களுக்கு ரூ. 1,11,000 அரசுக் கடனும் வழங்கப்பட்டு உள்ளது.

(2) யூனியன் பால் உற்பத்தி அதிகரித்து, குளிர் சாதன இயந்திரம் இயங்க ஆரம்பித்தால் நட்டம் சிறிது சிறிதாகக் குறைய வாய்ப்புள்ளது.

கோவை மாவட்ட பால் வழங்கு சங்கம்.

*வினா எண் 357—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் விநியோகிக்கப்படும் பால் அளவு என்ன ?

(ஆ) பால் விநியோக முறையை மாற்றியுள்ளதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) கோவை மாவட்ட பால் வழங்கும் சங்கம் என்று ஏதும் இல்லை. ஆயினும் கோவை கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம் என ஒன்று இயங்கி வருகின்றது. இது தற்போது தினசரி 20,300 லிட்டர் பாலை பொது மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

1979 மார்ச் 12]

(ஆ) கோவை தொழிலாளர் நலத்துறை ஆணையர் அவர்கள் முன்னிலையில் 1977-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25-ம் நாளன்று தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் கோவை கூட்டுறவு பால் விநியோக ஒன்றிய நிர்வாகத்திற்கும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி மிதி வண்டியில் பால் விநியோக முறையை மாற்றி பால் பூத் (milk booth) மூலம் விநியோகம் செய்யும் முறை ஏற்படுத்தப்பட்டது. இது அரசுக்குத் தெரியும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தன்னிலை விளக்கம்.

மத்திய அரசாங்க மின்சாரத் துறை அமைச்சர் ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டில் மட்டும் கையொப்பமிட்டு புத்தாண்டு வாழ்த்து அனுப்பியது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9-ம் நாளன்று எதிர்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் மத்திய அமைச்சர், மின்சாரத் துறை அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்களைப் பற்றி ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறினார்கள். அது சம்பந்தமாக நான் ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறபோது மத்திய அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிய புத்தாண்டு வாழ்த்தில் தமிழ்நாட்டிலுள்ள எம்.பி.-க்கள் அனைவருக்கும் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே கையெழுத்திட்டு அனுப்பியிருக் கிறார்கள். தமிழ் இடம் பெறவில்லை, மத்திய அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் ஏன் தமிழில் கையெழுத்து போடவில்லை, தமிழ் என்ன பாவம் செய்தது என்று கூறிய தோடு அந்தச் செய்தி அனைத்துப் பத்திரிகைகளிலும் அன்றைய தினமே விளம்பரம் செய்யப்பட்டது.

குறிப்பாக மாலை முரசு பத்திரிகையில் மத்திய மந்திரி திரு. பா. இராமச்சந்திரன் இந்தியில் கையெழுத்து போடுவதா என்ற கேள்வியோடு இந்த அளவிற்கு தலையங்கங்கள் இட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. ஆக, அந்தச் செய்தியால் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் ஒரு தவறுதலான கருத்தை எதிர்கட்சித் தலைவர் கொடுத்திருக்கிறார்கள் என் பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் தங்களிடம் காட்டியதுபோல் மத்திய அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் இந்தியில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தாண்டு வாழ்த்தை அச்சடித்து அனைத்து பாராளுமன்ற